මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01 Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11 - 2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PFD/PMD/Clari/11/02
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2012.01.05

**அரச நிதிச் சுற்றறிக்கை இல: 01/2012**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட முறைச் சபைகள், அதிகார சபைகள் மற்றும்
அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

**சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்களை வழங்கும் திட்டம்.**

சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்களை வழங்குவது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள அரச நிதிச் சுற்றறிக்கை இல: 452 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுடன் தொடர்புடையதாகும்.

2. சமூக அடிப்டையிலான நிறுவனங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்களை வழங்குவதற்கு தகைமைகள் மதிப்பீடு செய்வதற்கான நிபந்தனையாக அந்த சங்கங்கள் ‘இக்டாட்’ நிறுவனத்தில் பதிவு செய்யப்படுதல் தேவைப்பட மாட்டாது.

3. சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது செயல் வலுவிலிருக்கும் நிபந்தனைகள் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

3.1 திணைக்களத் தலைவர் மற்றும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் இரண்டு பிரதிநிதிகளுடன் மூன்று பேர்களைக் கொண்ட குழுவொன்றின் மூலம் இங்கு இல: 3.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கீழ்காணும் சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் வழங்க இயலும்.

I. சமுர்த்தி அமைப்புகள் / சமுர்த்தி சங்கங்கள்.

II. பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.

III. கூட்டுறவு தொழிலாளர் சங்கங்கள். ( தொழிலாளர் சேவைகளுக்கு மட்டும்.)

IV. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்.

V. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள். (அதிகார எல்லைப் பிரதேசங்களுக்கு உரித்துடையதாக பாடசாலை வளவுகளில் நடைமுறைப்படுத்தப்படும்.)

VI. அங்கீகரிக்கப்பட்ட கம நிறுவனங்கள்.

VII. கிராமோதய சபைகள் மற்றும் சமூக அபிவிருத்தி சங்கங்கள். (உள்ளூராட்சித் துறையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்யும் சங்கங்கள்)

VIII. கெமி திரிய மக்கள் கம்பனிகள்.

IX. கூட்டு ஆதிக்க முகாமைத்துவ அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டு ஆதிக்க முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள்.

X. விகாரை ரீதியான செயலாற்றுகைச் சங்கங்கள். ( தங்களது விகாரைகள் மற்றும் தருமப் பாடசாலை வளவுகளில் நடைமுறைப்படுத்தப்படும்.)

XI. விகாரை ரீதியான உபய சபைகள் ( தங்களது விகாரைகள் மற்றும் தருமப் பாடசாலை வளவுகளில் நடைமுறைப்படுத்தப்படும்.)

XII. சமூக சேவைகள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய முதியோர் செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிராமிய முதியோர் குழுக்கள்.

XIII. பிரதேச செயலாளர் திருப்தியடையக் கூடிய திணைக்களத் தலைவரினால் இனங்காணப்படும் சமூக நிறுவனங்கள்.

3.2. இந்த சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் பற்றி மேற்கூறப்பட்ட குழுவினால் கீழ்க்காணும் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு தகைமைகள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் தகுதியான சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு வேலை ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதனைச் சிபாரிசு செய்யலாம்.

i. வங்கிக் கூற்றுக்கள் மற்றும் அதிகப் பற்று வசதிகள் அங்கீகரிக்கும் சமுர்த்தி வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் அல்லது கிராமிய வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களினால் வங்கி மற்றும் நிதி வசதிகள் இருப்பதனை உறுதிசெய்யும் ஆவணங்கள்.

ii. சமமான வேலைகள் பற்றி முன் அனுபவங்களுக்குப் பங்களிப்புச் செய்துள்ளமைக்கான சான்றிதழ்கள் அல்லது நிறைவேற்றப்பட்டுள்ள வேலைகள் போன்றே அவற்றின் தரங்கள் பற்றி திருப்தியடையக் கூடியமைக்கான சான்றுகள்.

iii. ஒரு வருடத்திற்கு முன்னர் ஒப்படைக்கப்பட்ட எனினும் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தங்கள் உட்பட்டதாக கடந்த வருடத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றி உரித்துடைய சங்கம் வெளியிட்டுள்ள கூற்றொன்று

(ஒப்பந்தத்தின் பெயர், இடம், சேவை வழங்கல், ஒப்பந்தத்தின் பெறுமதி மற்றும் தற்போதைய நிலைமை)

iv. உரித்துடைய வேலைகள் துணை ஒப்பந்தம் வழங்கப்பட மாட்டாதென சங்கத்தினால் வழங்கப்பட்ட கூற்றொன்று. ( துணை ஒப்பந்தங்களில் ஈடுபட்ட அவ்வாறான சங்கங்கள் / நிறுவனங்கள் கருப்புப் பட்டியலிடப்படல் வேண்டும்.)

3.3 ஒப்பந்தம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் உரித்துடைய சமூக அடிப்படையிலான நிறுவனம் மூன்று ஒப்பந்தங்களை விடக் கூடிய ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருத்தல் கூடாது. எவ்வாறாயினும், பிரதேச செயலாளர் பிரிவொன்று அளாவக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் சமூக அடிப்படையிலான நிறுவனமொன்றின் அதிகார எல்லை முழு பிரதேச செயலாளர் பிரிவாக இருக்கும் சந்தர்ப்பமொன்றில் மற்றும் அந்தப் பிரிவில் பல்வேறு துறைகளில் ஒப்பந்த வேலைகள் நிறைவேற்றுவதன் பொருட்டு போதியளவு நிதி, சிரமம் மற்றும் தொழில் முயற்சி இயலுமைகள் உள்ளதாக தனிப்பட்ட முறையில் திருப்திப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச செயலாளருக்கு மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் சமூக அடிப்படையிலான நிறுவனத்திற்கு மூன்று ஒப்பந்தங்களை விடவும் கூடுதலான எண்ணிக்கையை வழங்க இயலும்.

3.4 ஒப்படைக்கப்படும் ஒப்பந்தமானது சமூக அடிப்படையிலான நிறுவனத்தின் / சங்கத்தின் அதிகார எல்லைக்குள் இருத்தல் வேண்டும்.

3.5 திணைக்களத் தலைவர், உரித்துடைய மாவட்டச் செயலாளர், அல்லது பிரதேச செயலாளர் இந்த சமூக அடிப்படையிலான நிறுவனத்தினால் செய்யப்படும் ஒப்பந்த நடவடிக்கைகள் சிறந்த தரத்தில் செய்யப்படுகின்றதெனவும், உரித்துடைய தொழில் நுட்பக் கண்காணிப்பு மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதெனவும் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

3.6 நிறைவேற்றப்படும் விடயங்கள் பற்றிய சமூக அடிப்படையிலான நிறுவனத்தின் பெயர், அக்கருத்திட்டத்திற்கு அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட செலவினம், சமூக அடிப்படையிலான நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கிய நிறுவனதின் பெயர், பயன் பெறுவோர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்கள் கொண்ட பெயர்ப் பலகையொன்று பிரதேச மக்கள் அறிந்து கொள்வதன் பொருட்டு தயாரிக்கப்படுதல் வேண்டும்.

4. இதற்கு உரித்துடையதாக அரசாங்க பெறுகை வழிகாட்டி நெறிகள் 3.9.1 க்கு உரித்துடையதாக வெளியிடப்பட்டுள்ள மேலதிக மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை இல: 452 இரத்துச் செய்யப்படுகின்றதென்பதுடன் அதற்குப் பதிலாக இந்தச் சுற்றறிக்கையை மட்டும் உரித்துடையதாக்கிக் கொள்ளுமாறு அறிவிக்கின்றேன்.

ஒப்பம்: பீ.பி. ஜயசுந்தர
திறைசேரிச் செயலாளர்